used to cost about eight annas per kilo , now costs Rs. 1·50 or Rs. 2 because they are exported to other cities. So, may I know whether the Hon. Minister will make arrangements to see that the cost of vegetables is reduced ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதற்கான முயற்சிகளை விவசாய இலாககா செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கமே உற்பத்தி செய்து கொடுப்பதா அல்லது விவசாயிகளுக்கு வேறுபல வகைகளில் ஊக்கம் அளித்து உற்பத்தி செய்து கொடுப்பதா என்பது எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. வெளிமார்க்கெட் விலை அதிகமாக இருக்கிற போது அவர்கள் அங்கே விற்றுவிடுகிறார்கள். ஆகவேதான் சீசனில் விவசாயிகளை அணுகி எந்த முறையில் மலிவான முறையில் பெற்றுத் தரலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

* 406 Q—THIRU N. DENNIS : } Will the Hon. the Minister
THIRU G. R. EDMUND : }
for Food and Co-operation be pleased to state :

(a) whether the Tamil Nadu Co-operative Marketing Federation has undertaken the sale of Kashmir apples in this State ; and

(b) if so, the details therof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் ரொக்கம் செலுத்தி, சரக்குகளைப் பெறுதல், சரக்கு ஒப்படை ஆகிய அடிப்படைகளின் பேரில் 31—12—1973 வரை காஷ்மீர் பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சம்மேளனத்தினிடமிருந்து 4,506 பெட்டி ஆப்பிள்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. இந்த சம்மேளனம் 31—12—1973 வரை 1,572 பெட்டி ஆப்பிள்களை விற்று மொத்தம் ரூ. 570 வருவாய் ஈட்டி யுள்ளது. குளிர்ப்பதனச் சாதனத்திற்காக கட்டண வகையில் ரூ. 13,793 கிடைத்தது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க் கெட்டில் குறைவாக இருப்பதாகவும், கூட்டுறவு மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதாகவும் பொதுமக்கள் கருதுகிறார்கள். ஆகவே காஷ்மீர் ஆப்பிள் என்ன விலைக்கு வாங்கப்படுகிறது ? இங்கே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ. ஆறு, ஏழுக்கு விற்கிறார்கள். கூட்டுறவு மார்க்கெட்டில் விற்பதற்கு நாம் மொத்த

வியாபாரிகளுக்கு கிலோ ரூ. 3 அளவில்தான் கொடுக்கிறோம். அவர்கள் லாபம வைக்கிறபோதும் கூட ரூ. 6-க்குக் குறைவாகவேதான் இருக்கும். வெளிமார்க்கெட்டைவிட நிச்சயமாக இது கூடியிருக்க முடியாது.

Wages for employees in Cinchona Plantations.

* 407 *Q*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Minimum Wages Committee has recommended recently to the Government that the wages to the workers in Cinchona Plantations should be on a par with workers in other plantations ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) and (இ): சின்கோனு தோட்டத்தில் வேலைக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்யும்போது, ஏனைய மலைத்தோட்டப் பயிர்கள் குறித்து நிலவிவரும் ஊதிய வீதங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றும், மேற்படி காரியத்திற்காக காப்பித்தோட்டங்களில் கொடுக்கப்படும் ஊதிய வீதங்களையேனும் பின்பற்றலாமென்றும் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு பரிவுரை செய்தது.

திரு. என்.கே. பழனிசாமி: 1959 ஆம் ஆண்டு மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் 3 வருஷங்களுக்கு ஒரு முறை குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி இருக்கிறபோது, இப்போது ஏறியுள்ள விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, அவர்களது குறைந்த பட்ச கூலியை உயர்த்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த அரசு வந்த பிறகு சிங்கோனு தொழிலாளர்களுக்கு 1—2—1973 அன்றுதான் குறைந்த பட்ச கூலி நிர்ணயித்து நடைமுறைக்கு வந்திருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு மீண்டும் இவர்களது குறைந்த பட்சக் கூலியைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றால் பரிசீலனை செய்ய அரசு தயார். ஆனால் காப்பி, தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல கொடுப்பதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ல் புதிய குறைந்த பட்சக் கூலி விகிதம் வந்த பிறகு 1973-லும், 1974 தொடக்கத்திலும் விலைவாசிகள் ஏகமாக ஏறிவிட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே அவர்களது கூலி விகிதத்தை காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்பவர்களுக்கு உள்ளதுபோல உயர்த்த முன்வருவார்களா ?